உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

திருவெண்ணைநல்லூரைத்
திருப்பதியாகவெழுந்தருளிய பொல்லாப்பிள்ளையார்
திருவாய்மலர்ந்தருளிய
சிவஞானபோதச்சூர்ணிக்கொத்தும்
மெய்கண்டசிவாசாரியார் திருவாய்மலர்ந்தருளிய

# சிவஞானபோதமூலமும்.

இவை
சாக்கிர் ஆரணி ம-ா-ஸ்ரீ
காசி-நாராயணசாமிமுதலியாரவர்களும்,
ஷை ஊர் ம-ா-ஸ்ரீ- சந்நியாசி
குப்புசெட்டியாரவர்களும்,
பலகால்வேண்டிக்கொண்டபடி

திரிசிரபுரம்
வித்வான்
**மதுரைநாயகம்பிள்ளையவர்களால்**
பிழையறப்பரிசோதித்து

சென்னபட்டணம்.
லைசியம்பிரசில் அச்சிடப்பட்டன.
அட்சய௵ ஐப்பசிமீ

*(Registered CopyRight.)*

# விளம்பரம்

---

☞ இப்புத்தகத்திலடங்கிய நான்குசாத்திரங்கள் தவிர மற்றையசாஸ்திரங்களும் விரைவில் அச்சிடப்படும்.

இப்புத்தகம் வேண்டியவர்கள் சென்னபட்டணம் ஏகாம்பரேஸ்பரன்கோயிற்றெருவில் - ௱௪௧ - வது, கதவிலக்க முள்ளவீட்டில் நூற்கிடங்குவைத்திருக்கும், ம-௱-ஸ்ரீ, கரார் நாராயணசாமிசெட்டியார், ம-௱-ஸ்ரீ, இரத்தினவேலுசெட்டியார், ம-௱-ஸ்ரீ, குப்புசெட்டியாரிடத்திலும், தங்கசாலைத் தெருவுசுமைதாங்கிக்கெதிர் வீட்டிலிருக்கும், ம-௱-ஸ்ரீ, வேலூர், குமாரசாமிஐயரவர்களிடத்திலும், இராணிப்பேட்டையிலிருக்கும் சராப், ம-௱-ஸ்ரீ, இரங்கசாமிநாய்க்கரிடத்திலும், வாங்கிக்கொள்ளலாம்.

இச்சைவசித்தாந்த சாத்திரங்களை அச்சிடுதற்கு உபகாரஞ் செய்த நமதுஇஷ்டர் பலருள் முக்கியராகிய ம-௱-ஸ்ரீ ஆரணி சந்நியாசி குப்புசெட்டியாரவர்கள் அறிவொழுக்கங்களிற் சிறந்தவராய் எச்சமயங்களினுஞ் சிறந்த நமது சற்சமயமாகிய சைவசமயப்பயிர் புறச்சமயக்களைகளான் மூடப்பட்டிருப்பதையுணர்ந்து அக்களைகளை வேரோடகழ்ந்தெறியத் தம்மாற்கூடிய விடாமுயற்சிசெய்யவேண்டுமென் றெண்ணங்கொண்டிருப்பதனால் அவரை நாம் புகழ்வதுபோலப் புகழாதவர் உலகத்தில் யாவர்.

## சிவஞானபோதம்.

| பக்கம். | பாட்டு. | வரி. | பிழை. | திருத்தல். |
|---|---|---|---|---|
| ௰௩ | ௩ | ௪ | கூட்டரனே | கூட்டானே |
| ௨௯ | | ௭ | ருயதனை | ருய்தனை |

## சிவஞானசித்தியார்பரபக்கம்.

| பக்கம். | பாட்டு. | வரி. | பிழை. | திருத்தல். |
|---|---|---|---|---|
| ௩௪ | ௨ | ௨ | மொருள் | பொருள் |

## சிவஞானசித்தியார்சுபக்கமூலம்.

| பக்கம். | பாட்டு. | வரி. | பிழை. | திருத்தல். |
|---|---|---|---|---|
| ௩ | ௧ | ௩ | அன்பொடு | அன்பொடும் |
| ௫ | ௧ | ௩ | யெலலா | யெல்லா |
| ௸ | ௨ | ௩ | பேசறு | பேசுறு |
| ௯ | ௪ | ௨ | வேணடா | வேண்டா |
| ௸ | ௸ | ௸ | வெனனி | வென்னி |
| ௰ | | | தித்தியார் | சித்தியார் |
| ௸ | ௰ | ௩ | காரணவிதி | காரணன்விதி |
| ௰௧ | ௰௫ | ௧ | வஞசம் | வஞ்சம் |
| ௰௪ | ௩௧ | ௧ | தோனறும் | தோன்றும் |
| ௰௮ | ௫௮ | ௨ | கொணடே | கொண்டே |
| ௨௩ | ௰௨ | ௩ | மகிதங்களெல்லா | மகிதங்கட்கெல்லா |
| ௨௪ | ௨௨ | ௨ | பலமிவை | புலவிவை |
| ௸ | ௨௩ | ௪ | யிழிச்கிலா | யிழுக்கிலா |
| ௨௬ | ௩௧ | ௨ | யிட்டுவை | யிட்டும்வை |

# பிழைதிருத்தல்.

## சிவஞானசித்தியார்சுபக்கமூலம்.

| பக்கம். | பாட்டு. | வரி. | பிழை. | திருத்தல். |
|---|---|---|---|---|
| ௩௪ | ௭௮ | ௪ | முணர்ந்தேன | முணர்ந்தோன |
| ௩௬ | ௯௪ | ௪ | பின்பாயுமன் | பின்மாயமன் |
| ௩௮ | ௩ | ௪ | பார்கஷி | பார்க்ஷி |
| ௪௫ | ௭ | ௩ | மிருபயனுக்கியை | மிருபயனுக்கவை |
| ௪௯ | ௩ | ௮ | நிற்பீசஞ் | நிர்ப்பீசஞ் |
| ௫௰ | ௨ | ௩ | நிற்பீசஞ் | நிர்ப்பீசஞ் |
| ௫௪ | ௰௮ | ௬ | சாயு;ச்சியங்களை | சாயுச்சியமெ |
| ௫௬ | ௨௨ | ௬ | ஞாதிரு | ஞாதுரு |
| ௬௩ | ௬ | ௨ | கோகனகமுதல் | கோகனகன்முதல் |
| ௬௯ | ௫ | ௧ | ஆணவந்தா'னுதி | ஆணவந்தானநாதி |
| ௭௪ | ௭ | ௧ | பிரப்பிரம | பரப்பிரம |

## சிவப்பிரகாசம்.

| பக்கம். | பாட்டு. | வரி. | பிழை. | திருத்தல். |
|---|---|---|---|---|
| ௪ | ௯ | ௬ | நாலாறைந் | நாலாறுறைந் |
| ௯ | ௰௨ | ௧ | படியின்றி | படியன்றி |
| ௰௫ | ௨௯ | ௩ | கலாதிசுத்தி | கலாசுத்தி |
| ௨௧ | ௫௫ | ௨ | யறிந்தனமென் | யறிந்திடுமென் |
| ௨௩ | ௬௮ | ௧ | புணராமே | புணராமை |
| ௸ | ௸ | ௨ | தோன்றுமே | தோன்றுமை |

## விருவெண்பா.

| பக்கம். | பாட்டு. | வரி. | பிழை. | திருத்தல். |
|---|---|---|---|---|
| ௨௭ | ௩ | ௨ | மல்லவில | மல்லதில |

உ

சிவமயம்.

# நூல்வரலாறு.

அநாதிமுத்தசித்தாயபரமசிவம் தமதனுக்கிரகத்தைப் பெற்றபிரணவர்முதலிய விஞ்ஞானகலர் பதின்மருக்குமுருத்திரர்பதினெண்மருக்கு மருளிச்செய்த பஞ்சமுகோற்பவமாயருண்மயமாய் விளங்கிய காமிகமுதலிய சிவாகமமிருபத்தெட்டினு ளொன்றாய விரௌரவாகமத்திற் பாவவிமோசனப்பட்லத்தின் ஞானபாதத்தினுளவாயவைய நீக்கற்பொருட்டுத் திருவாய்மலர்ந்தருளிய அவாதசசூத்திரமாகிய சிவஞானபோதத்தைத் தமதருட்பெற்ற ஸ்ரீநந்திதேவநாயனாருக்கனுக்கிரகிக்க அவர்சனற்குமாரபகவானுக்குபதேசிக்க அவர்சத்தியஞானதரிசனிகளுக்கருள அவர்பரஞ்சோதிமாமுனிகளுக்கனுக்கிரகிக்க அவர் தென்றிசையுய்யக்கிருபாவசத்தா லெழுந்தருளியபோது திருவெண்ணை நல்லூரைத்திருப்பதியாக வெழுந்தருளிய வேளாளகுலதிலகராய சுவேதவனப்பெருமாளென்னும் பிள்ளைத்திருநாமத்தினையுடைய மெய்கண்ட தேவநாயனாருக்கருள அவர் தாமனுக்கிரகிக்கப்பெற்ற வவ்வடநூற்சிவஞானபோதத்தை (தொகுத்தல்விரித்த றொகைவிரிமொழிபெயர்ப் பெனத்தகுநூல்யாப் பீரிரண்டென்ப) என்னுமோத்தின்படியே மொழிபெயர்ப்பாகச் சூத்திரித்தச்சூத்திரக்கருத்து விளங்க வார்த்திகமென்னும் பொழிப்புரையோடுசிலவெண்பாக்களுமியற்றி (முதனூல்கருத்தனளவு மிகுதிபொருள் செய்வித்தோன் றன்மைமுதனிமித்தினு மிடுகுறியானுநூற் செய்தும்பெயரே) என்னுமியலின்படியே வம்முதனூற்பெயரே இதற்குப்பெயராகநிறுவியருளியதெனவுணர்க.

திருச்சிற்றம்பலம்.

ஞானபாதத்தினையுணர்த்துஞ் சைவசித்தாந்தசாத்திரம் பதினான்கினுக்குண் மிகச்சிறந்ததாய் முதனூலாய்விளங்கியது இச்சிவஞானபோதமேயாம்.

---

## நூற்சிறப்பு.

### வெண்பா.

வேதம்பசுவதன்பான் மெய்யாகமநால்வ ... ... *
ரோதுந்தமிழதனினுள்ளூறுநெய்—போதமிகு ... ... *
நெய்யினுறுசுவையா நீள்வெண்ணெய்மெய்கண்டான் ... ... *
செய்ததமிழ்நூலின்றிறம் ... ... ... *

## நூற்கருத்து.

முதற்பதியரனேயைக்துமுன்னத்துவிதமிரண்டே ... ...*
மிதற்பினையனுமானத்தாலெண்ணிலாவுயிர்கண்மூன்றே ...*
யதற்பினேயவத்தைநான்கேயகமறுத்திடலேயைந்தே ... *
செகற்பதிபிரித்தலாறே தெரிவித்தலுயிரையேழே ... ...*

மறைப்பினைநீக்கிஞானவாரியைநினைத்தலெட்டே ... ...*
சிறப்புடையுபாயந்தம்மாற்றெளிவித்தலுயிரையொன்பா ...*
னறுத்திடன்மலங்கள்பத்தே யழுந்தலேசிவத்திலொன்றே...*
திறப்பணிகொளவிரண்டே சிவஞானபோதஞ்சித்தி ... ...*

---

## நூற்பாடற்றொகை.

### வெண்பா.

ஐயொருபதேழேழுமாங்கமைந்தநாலாறு ... ... *
மையொன்பதோரொட்டோடாறுறுந்—துய்யவெட்டோ ...*
டெண்பத்துமொன்றுஞ்சிவஞானபோதத்தின் ... *
மன்னருளும்வெண்பாவகை... ... ... *

3 TO 16 PAGES MISSING IN BOOK

## மூன்றாஞ்சூத்திரம்.

உளதிலதென்றலி னெனதுடலென்றலி ... ... ...*
னைம்புலனொடுக்க மறிதலிற்கண்படி ... ... ... *
லுண்டிவினையின்மையினுணர்த்தவுணர்தலின் ... ...*
மாயாவியந்திரதனுவினுளான்மா ... ... ... *

எ - ன் - ஆன்மப்பிரகாசமுணர்த்துதனுதலிற்று - உளதென்றது ஆன்மாவுளதென்றெங்குமொட்டிப் பொருளுரைக்கற்பாற்று.

இனியிலதென்றலி னான்மாவுளதென்றது - எவற்றினையுமன்றன்றெனவிட்டான்மா விலதென்று நிற்பதுளதாதலினதுவேயவ்வான்மாவாமென்றது.

உ - ம்.

அன்றன்றெனநின்றனைத்தும்விட்டஞ்செழுத்தாய் ... ... *
நின்றொன்றுளதுவேநீயனைத்து—நின்றின்று ... . ...*
தர்ப்பணம்போற்காட்டலாற் சார்மாயை நீயல்லை ... *
தற்பரமுமல்லைதனி ... ... ... ... ... (௧)

இனியெனதுடலென்றலினான்மாவுளதென்றது- என்பதியென்மனையென்றாற்போல வென்கையென்காலென நிற்பதுளதாதலினதுவே யவ்வான்மாவாமென்றது.

உ - ம்.

எனதென்றமாட்டினெனதலாதென்னு ... ... ...*
தனதலாவன்கைகாலாக்கை—யெனதென்று ... ... *
மென்னறிவதென்றுமுரைத்துநீநிற்றிகா ... ... ...*
ணுன்னிலவைவேறாமுணர் ... ... ... (௨)

இனியைம்புலனொடுக்கமறிதலினென்றது - ஐம்புலனறிதலினொடுக்கமறிதலினென்றுணரற்பாற்று.

இனியைம்புலனறிதலினுன்மாவுளதென்றது - ஐம்புலனுகிய சத்தபரிசருபரசகந்தங்களை யிந்திரியங்களொன்றறிந்த தொன்றறியாமையினிவ்வைந்தினுலுமைம்பயனுமறிவதுளதாதலினதுவேயவ்வான்மாவாமென்றது.

உ - ம்.

ஒன்றறிந்ததொன்றறியாதாகியுடன்மன்னி ... ... ...*
யன்றாம்புலனுயவ்வஞ்செழுத்தை—யொன்றறித... ...*
லுள்ளதேயாயினதுநீதனித்தனிகண்... ... ...*
டுள்ளலவையொன்றலையோர் ... ... ... (௩)

இனியொடுக்கமறிதலினுன் மாவுளதென்றது - நனவின்கட்கனவுகண்டாமென்றுங் கண்டிலமென்று நிற்பதுளதாதலினதுவேயவ்வான்மாவாமென்றது.

உ - ம்.

அவ்வுடலினின்றுயிர்ப்பவைம்பொறிசடாங்கிடப்பச்... ...*
செவ்விதினவ்வுடலிற்சென்றடங்கி - யவ்வுடலின்... ...*
வேறென்றுகொண்டுவிளையாடிமீண்டதனை ... ... ...*
மாறலுடனீயல்லைமற்று ... ... ... (௪)

இனிக்கண்படி லுண்டிவினையின்மையினுன்மா வுளதென்றது-ஒடுங்கின விடத்தின்பதுன்ப சீவனம்பிரகிருதிக் கின்மையினெடுங்காதவிடத்தின்ப துன்பஞ்சீவியா நிற்பதுளதாதலினதுவே யவ்வான்மா வாமென்றது.

உ - ம்.

கண்டறியுமிவ்வுடலே காட்டொடுங்கக்காணுதே ... ...*
யுண்டிவினையின்றி யுயிர்த்தலாற் - கண்டறியு ... *
முள்ளம்வேறுண்டா யொடுங்காதுடனண்ணி ... ... *
லுள்ளதாமுண்டிவினையூண் ... ... ... ... (௫)

இனியுணர்த்தவுணர்தலி னுண்மாவுளதென்றது - அவனறிந்தாங் கறிவனென் றறிவிக்கவறிந்துபதேசியாய் நிற்ப் துளதாதலினதுவேயவ்வான்மாவாமென்றது.

உ - ம்.

அறிந்துமறிவதேயாயுமறியா ... ... ... ...*
தறிந்ததையும்விட்டங்கடங்கி - யறிந்த... ... ... *
தெதுவறிவுமன்றுருகுமெய்கண்டானென்றி ... ...*
ன்துவ்வானென்னுமகம்... ... ... ... ... (௬)

இனிமாயாவியந்திரதனுவினுளான்மா வுளதென்றது-அவைதாம்- வெவ்வேறுபெயர் பெற்றுநிற்றலான்.

உ - ம்.

கலையாதிமண்ணந்தங் காணினவைமாயை ... ...*
நிலையாவாந்தீபமேபோல - வலையாமன் ... .. *
ஞானத்தைமுன்னுணர்ந்து நாடிலதுதனுவாந் ... ...*
தானத்தின்வேருகுந்தான். ... ... ... (௭)

மூன்ருஞ்சூத்திர முற்றிற்று.

---

நான்காஞ் சூத்திரம்.

அந்தக்கரணமவற்றினென்றன்றவை... ... ...*
சந்தித்ததான்மாச்சகசமலத்துணரா ... ... *
தமைச்சரசேய்ப்ப நின்றஞ்சவத்தைத்தே ... ...*

எ - ன் - இதுவுமது.

ஈண்டிவ்வான்மாவாவது - அந்தக்கரணங்களாயுள்ள மனோபுத்தி யாங்காரசித்தங்களிலொன்றன்றென்றது - அவைதாம் பிரகாசமாய் நின்றே யப்பிரகாசமாய் நிற்றலான்;

உ - ம்.

மனமாதியாலுணர்தன் மன்றுபுலன்கண் ... *
மனமாதிமன்புலனினல்லன் - மனமே ... ...*
னுதித்தொன்றையுள்ளமுணர்தலதனி ... ... *
னுதிக்குங்கடற்றிரையையொத்து. ... ... (க)

சிந்தித்தாய்சித்தந்தெளியாதாயாங்காரம் ... ... ...*
புந்தியாயாய்ந்துமனமாகிப் - பந்தித்து ... .. *
வெவ்வேறுதானேதுணிந்துள்ளமிவ்வேறு ... ...*
மவ்வேறும்போதுபோலாங்கு ... ... (உ)

அகாரவுகாரமகங்காரம்புத்தி ... ... ...*
மகாரமனஞ்சித்தம்விந்துப் - பகாதிவற்றை ... ... *
நாதமுளவடிவா நாடிற்பிரணவமாம்... ... ...*
போதங்கடற்றிரையே போன்று ... ... (ங)

எண்ணிலவோங்காரத்தீசர்சதாசிவமா ... ... ...*
நண்ணியவிந்துவொடுநாதத்துக் - கண்ணிற் ... ... *
பகரயன்மாலோடுபரமனதிதெய்வ... ... ...*
மகரவுகரம்மகரத்தாம் ... ... ... (ச)

இனியிவ்வான்மாச்சகசமலத்தினுலுணர்வின் றென்றது- அதுதான் - ஞானதிரோதமாய் மறைத்துக்கொடு நிற்றலான்.

உ - ம்.

மாயாதனுவிளக்காய் மற்றுள்ளங்காணுதே ... ...*
லாயாதாமொன்றையதுவதுவாய் - வீயாது... ... *
வன்னிதனைத்தன்னுண்மறைத்தொன்றுங் காட்டம்போற் ...*
றன்னைமலமன்றணைதருள் ... ... (ரு)

இனியிவ்வான்மா - சாக்கிரஞ் சொர்ப்பனஞ்சுழுத்தி துரியந் துரியாதீத மாயுள்ளபஞ்சாவத்திதனாய் நிற்குமென்றது - அது தான்-மலசொரூபத்தின் மறைந்தரூபசொரூபியாய் நிற்றலான்.

உ - ம்.

ஒன்றணையாமூலத் துயிரணையுநாபியினிற் ... ...*
சென்றணையுஞ்சித்தமிதையத்து - மன்றவே ... ... *
யையயந்தானன்னுதலிற் கண்டத்துவாக்காதி ... ...*
மெய்யறிவிட்டகன்றுவேறு ... ... (சா)

இலாடத்தேசாக்கிரத்தை யெய்தியவுள்ள ... ...*
மிலாடத்தேயஞ்சவத்தையெய்து - மிலாடத்தே ... *
யுவ்வவவிந்திரியத் தத்துறைகள்கண்டதுவே ... ...*
யவ்வவற்றினீங்கலதுவாங்கு ... ... (எ)

நான்காஞ் சூத்திரம்
முற்றிற்று.

---

## ஐந்தாஞ் சூத்திரம்.

விளம்பியவுள்ளத்து மெய்வாய்கண்மூக் ... ... *
களந்தளந்தறியாவாங்கவைபோலத் ... ... ...*
தாந்தமுணர்வின் றமியருள்... ... ... *
காந்தங்கண்டபசாசத்தவையே ... ... ...*

எ - ன் - இவ்வான்மாக்களிடத்துத் தமது முதலுபகார முணர்த்துதனுதலிற்று.

ஈண்டையுணர்வுகளான்மாவா லுணருமென்றது - அவற் றினாலான்மாவொற்றித்துக்காணினல்ல தவையொன்றையும் விடையியாவாகலான்.

௨ - ம்.

ஐம்பொறியையாண்டங் கரசாயுளநிற்ப... ... *
வைம்பொறிகளுள்ள மறியாவா - மைம்பொறியிற் ... ...*
காணுதேற்காணுது காணுமுளங்காணுதேற் ... *
காணுகண்கேளா செவி ... ... ... (க)

இனியிவ்வான்மாத்தன்ஞலேயுணரு மிந்திரியங்களைப் போலத்தானுந்தன்னையுணராது நிற்றலாலிதுவுந்தமது முதலாலேயுணருமென்றது.

௨ - ம்.

மன்னுசிவன் சன்னிதி * யின்மற்றுலகஞ்சேட்டித்த ... ...*
தென்னுமறையினியன்மறந்தாய் - சொன்னசிவன் ...*
கண்ணுயுளம்வினையாற் கண்டறிந்துநிற்குங்கா ... ...*
ணெண்ணுன்சிவனசத்தையின்று... ... ... (௨)

வெய்யோனொளியினொடுங்கிவிளங்காது ... ... ...*
வெய்யோனையாகாதமீன்போல - மெய்யவனிற்... ...*
கண்டுகேட்டுண்டுயிர்த்துற்றறியுமைம்புலனைக் ... ...*
கண்டனுய்மன்னுதலைக்காண்... ... ... (௩)

அருளுண்டாமீசற்கதுசத்தியன்றே... ... ... ...*
யருளுமவனன்றியில்லை - யருளின் ... ... ...*
றவனன்றேயில்லையருட்கண்ணார்கண்ணுக் ... ...*
கிரவிபோனிற்குமரனேய்ந்து ... ... ... (௪)

ஐந்தாஞ்சூத்திரம்.

முற்றிற்று.

---

* சன்னிதி - சத்தி.

## ஆறுஞ்சூத்திரம்.

உணருருவசத்தெனினுணரார்தின்மையி... ... ...*
னிருதிறனல்லது-சிவசத்தாமென... ... ...*
விரண்டுவகையி-னிசைக்குமன்னுலகே ... ... ...*

என் - சத்துமசத்தும்வரைசெய்துணர்த்துதனுதலிற்று.

ஈண்டறிவினலறியப்பட்ட சுட்டசத்தென்றது - அவை தாம்பிரகாசமாய்நின்றே யப்பிரகாசமாய்நிற்றலான்.

உ - ம்.

அசத்தறியாய்கேணியறிவறிந்தவெல்லா ... ...*
மசத்தாகுமெய்கண்டானுமி - னசத்தலாய் ... ...*
நீரிலெழுத்துநிகழ்கனவும்பேய்த்தேரு ... ... ...*
மோரினவையின்றாமாறுரைப்பு ... ... ... (க)

இனிப்பிரகாசத்தினுக்குப் பிரகாசிக்கவேண்டுவதின்மையானுமப்பிர்காசத்தினுக்குப் பிரகாசமின்மையானு மிவ்விரண்டுதன்மையுமின்றி வாக்குமனாதீதகோசரமாய் நின்றவதுவே சத்தாயுள்ளசிவமென்றுணரற்பாற்று.

உ - ம்.

எண்ணிச்சித்தன்றசத்தன்றாமென்றாலென் ... ...*
கண்ணியுளதென்றன்மெய்கண்டா - னெண்ணி ... ...*
யறியவிரண்டா மசத்தாதல்சத்தா... ... ... ...*
மறிவறியாமெய்சிவன்றாளாம் ... ... ... ... (உ)

உணர்பவசத்தாதலொன்றுணராதொன்றை ... ... ...*
யுணருநீதானுணராயாமி - னுணருமுனிற் ... ...*
றுனிரண்டாமெய்கண்டான்றன்னாலுணர்தலாற் ... ...*
றுனிரண்டாய்க்காணன்றமி... ... ... ... (௩)

பாவகமேற்றுனசத்தாம்பாவனுதீதமெனிற் ... ... ...*
பாவகமாமன்றென்னிற் பாழதுவாம் - பாவகத்தைப்... ...*
பாவித்தருனெனினிற்பாவகமாந்தன்னருளாற் ... ...*
பாவிப்பதுபரமில்பாழ்... ... ... ...(ரு)

அறியவிரண்டல்லனுங்கறிவுதன்னு ... ... ...*
லறியப்படானறிவினுள்ளா - னறிவுக்குக்... ... ...*
காட்டாகின்றுனைக்கண்ணறியாமெய்யென்னக் ... ...*
காட்டாதறிவறிந்து கண்டு ... ... ... (ரு)

அதுவென்னுமொன்றன்றதுவன்றிவேறே... ... ...*
யதுவென்றறியறிவுமுண்டே - யதுவென் ... ... ...*
றறியவிரண்டல்லனுங்கறிவுணிற்ற ... ... ...*
லறியுமறிவேசிவமுமாம் ... ... ... ... (சு)

ஆறாஞ்சூத்திரம்
முற்றிற்று.

---

ஏழாஞ்சூத்திரம்.

யாவையுஞ்சூனியஞ்சத்தெதிராதலிற் ... ... ...*
சத்தேயறியாதசத்திலதறியா ... ... ... ...*
திருதிறனறிவுளதிரண்டலாவான்மா... ... ...*

எ - ன் - மேலதற்கோர்புறனடை * யுணர்த்துதனுதலிற்று ஈண்டுச்சத்தினிடத்தசத்துப் பிரகாசியாதென்றது - மெய்யினிடத்துப் பொய்யப்பிரகாசமாய் நிற்றலான்.

---

* நெய்க்குடமானு நீர்க்குடமானும்வைப்பார் குறடானுங்கல்லானும் புறத்தடுத்துவைப்பர் அவையக்குடத்தினையுஞ்சாயாமற்காத்துப் புறத்துவருமிடையூறுகளையு நீக்குமது

உ - ம்.

அன்னியமில்லாமையரற்கொன்றுணர்வின்று ... ...*
மன்னியமில்லானசத்தைக்காண்குவனே - லன்னியமாய்க் ...*
காணுனவன்முன்கதிர்முனிருள்போல ... ... ...*
மாணுவசத்தின்மைமற்று ... ... ... (க)

இனியசத்தினுக்குணர்வின் றென்றது- அதுதானி ரூபிக்கிலின்றதலான்.

உ - ம்.

பேய்த்தேர்நீரொன்றுவரும் பேதைக்குமற்றணைந்த ... ...*
பேய்த்தேரசத்தாகும் பெற்றிமையின் - வாய்த்ததனைக்... *
கண்டுணர்வாரில்வழியிற் காணுமசத்தின்மை ... ...*
கண்டுணர்வாரில்ல தெனக்காண் ... ... ... (உ)

இருதிறனறிவுள திரண்டலாவான்மாவென்றது .- இவ்விரண்டினையு மறிவதாயுபதேசிபாய் நின்றவறிவிரண்டின்பாலுமுளதாயுள்ளவதுவே யவ்வான்மாவாமென்றது.

உ - ம்.

அருவுருவந்தானறித லாயிழையாயான்மா ... ...*
வருவுருவமன்றுகுமுண்மை - யருவுருவாய்த் ... ... *
தோன்றிடலில்லாது - தோன்றுதுமில்லாது ... *
தோன்றன்மலர் மணம்போற்றுக்கு ... ... (ங)

---

போலச்சூத்திரத்துட் சொல்லப்பட்டபொருளையாப்புறத்தானுமுதற்சூத்திரத்துளில்லாத பொருளைத்தழீ இயானுநிற்பது புறனடையெனவுணர்க - இஃது ஒத்துப்புறனடை அதிகாரப்புறனடை சூத்திரப்புறனடை பிண்டப்புறனடை நூற்புறனடை எனப்பலவகைப்படும் என்னை (ஒத்ததிகாரஞ் சூத்திரம் பிண்டம் யாத்தநூலென வைந்தாம் புறனடை) என்பதோத்தாகலின். புறநடை-எனவுமோதுப.

மயக்கமதற்று மருந்திற்றெளிந்தும் ... ... ... *
பெயர்த்துணர்நீசத் தாகாய்பேசி - லசத்துமலே ... ...*
நீயறிந்துசெய்வினைக ணீயன்றிவேறசத்துத் ... ... *
தானறிந்துதய்யாமைதான் ... ... (ச)
மெய்ஞ்ஞானந்தன்னில் விளையாதசத்தாத ... ... ...*
லஃஞானமுள்ள மணைதல்காண் - மெய்ஞ்ஞானந் ... *
தானேயுளதன்றே தண்கடனீருப்புப்போற்* ... ...*
றூனேயுளமுளவாய்த் தான் ... ... (டு)

ஏழாஞ்சூத்திரம்
முற்றிற்று.

---

## எட்டாஞ்சூத்திரம்.

ஐம்புலவேடரினயர்ந்தனைவளர்ந்தெனத் ... ...*
தம்முதல்குருவுமாய்த் தவத்தினிலுணர்த்தவிட் ... *
டன்னியமின்மையி - னரன்கழல்செலுமே... ... ...*

எ - - ன் - ஞானத்தினையுணர்த்து முறைமையினை யுணர்த்துதனுதலிற்று.

---

* தண்கடனீருப்புப்போ லென்றதனுல் - சிவம் - வியாபகமாயும் - சீவன் - வியாத்தியாயும் - பாசம்-வியாப்பியமாயுநிற்குமென்பது பெற்றும் - இதனை (வியாபகமாதிவிரிக்குங்காலே - வியாபகமேலிடுநிறைவாமென்ப - வியாத்திசமநிறைவாகும் விளம்பின் -வியாப்பியமொன்றின் மிடைந்தநிறைவே வியாபகங்கடலே வியாத்தியந்நீரோ - வியாப்பியமுவரொன விளக்கிய நூலே - வியாபகமீசன் - வியாத்தியாருயிர் - வியாப்பியமலமென வீக்கிய நூலே.) என்பனவற்றுனும் (கடல்சிவ நீருப்புவான்மமலம்) என்பதனுனுமுணர்க.

ஈண்டிவ்வான்மாக்கட்கு முற்செய்தவத்தான் ஞானநிகழு மென்றது - மேற்சரியைகிரியா யோகங்களைச்செய்துநீ இநன்னெறியாகியஞானத்தைக்காட்டி யல்லது மோட்சத்தைக்கொடாவாகலான்.

உ - ம்.

தவஞ்செய்தாரொன்றுந் தவலோகஞ்சார்ந்து ... ...*
பவஞ்செய்துபற்றறுப்பாராகத் - தவஞ்செய்த ... *
நற்சாரியில்வந்துதித்து ஞானத்தைநண்ணுதலைக் ... ...*
கற்றூர்சூழ்சொல்லுமாங்கண்டு ... ... (௧)

பசித்துண்டுபின்னும் பசிப்பானையொக்கு... ... ...*
மிசைத்துவருவினையிலின்ப - மிசைத்த ... ...*
விருவினையொப்பி*லிறப்பிறவத்தான் ... ... *
மருவுவனஞானத்தைவந்து ... ... (௨)

---

* இருவினையொப்பாவது - ஒருவன் வைப்பாட்டிக்கு வேண்டிய வாடையாபரணங்களும் பொசிப்புங் கொடுத்தவள் வீட்டிற் பதினைந்துநாளுந் -தன்மனையிலுள்ளாட்கு வேண்டிய வாடையாபரணங்களும் பொசிப்புங்கொடுத்தவள் வீட்டிற் பதினைந்துநாளும் போகம் புசித்துக்கொண்டுவருகையி லில்லற நூல்கேட்டுக் கற்புடைய மனைவியுடனேகூடியிருந் தில்லற நடாத்துவது முக்கியமென்றறிந்து வைப்பாட்டியையிழந்த வண்மேன்முன்னமோ நீயிருக்கப்பொருதவனவளைப் பள்ளர் முதலியோர் பிடித்தீர்த்தவிடத்தும் விருப்பின்றிவிட்டு நீங்கி யில்லாளோடு கூடியில்லறதர்ம நெடுநாட்செய்துகொண்டு வருகின்றநாளை யிற்றுறவறநூல் கேட்டுத்துறவற நடாத்துவது முக்கிய மென்றறிந்தில்லாளையும் வைப்பாட்டியைப்போற் கண்டுவிட்டு நீங்கியவ்விருவரையும் விருப்பும் வெறுப்புமின்றி

இனியிவ்வான்மாக்களுக்குத் தமதுமுதறுனேகுருவுமா யுண ர்த்து மென்றது - அவனன்னியமின்றிச் சைதன்னியசொரூபி யாய் நிற்றலான்.

உ - ம்.

மெய்ஞ்ஞானந்தானேவிளையும் விஞ்ஞானகலர்க் ... *
கஞ்ஞானவச்சகலர்க்கக் குருவாய் - மெய்ஞ்ஞானம் ... *
பின்னுணர்த்துமன்றிப் பிரளயாகலருக்கு ... ... ...*
முன்னுணர்த்துந்தான்குருவாய்முன் ... (௩)

அறிவிக்கவன்றியறியாவுளங்கள் ... ... ...*
செறியுமாமுன்பின்குறைக—ணெறியிற் ... ... ...*
குறையுடையசொற்கொள்ளார்கொள்பவத்தின்வீடென் ...*
குறைவில்சகன்சூழ்சொள்பவர்க்கு ... ... (௪)

இல்லாமுலைப்பாலுங்கண்ணீருமேந்திழைபா ... ...*
னல்லாயுளவாமானீர்நிழல்போ—லில்லா... ... ...*
வருவாகிநின்றுனே யாரறிவார்தானே ... ... ...*
யுருவாகித்தோன்றுனேலுற்று... ... ... ...(௫)

இனியிவ்வான்மாக்களையுணர் வுசளான்மயங்கித் தம்மை யுணராவென்றது - அவைதாம் பளிங்கிலிட்டவன்னம்போற் காட்டிற்றைக்காட்டிநிற்றலான்.

---

க்கண்டாற்போலப் பாவமும்புண்ணியமுஞ் செய்துகொண்டு வருங்கழி லறநூல்கேட்டுப் புண்ணியமுக்கியமென்றறிந்துபா வத்தைவிட்டுப் புண்ணியமுஞ்சனன மரணத்தைக்கொடுக்கை யாற் பாவத்தைப்போலத் தீதென்றறிந்துவிட் டவ்விரண்டி னையும் விருப்புவெறுப்பின்றிக் காண்டல்.

உ - ம்.

பன்னிறமேகாட்டும்படிகம்போலிந்திரியங் ... ... ...*
தன்னிறமேகாட்டுந்தகைநினைந்து—பன்னிறத்துப் ... ...*
பொய்ப்புலனைவேறுணர்ந்துபொய்பொய்யாமெய்கண்டான் *
மெய்ப்பொருட்குத்தைவமாம்வேறு... ... ... (சா)

இனியிவ்வான்மாத்தன்னை யிந்திரியத்து வேருவான்காணவே தமதுமுதல் பாதத்தையணையுமென்றது. அவைதாம்-ஊசத்சயறற்ருற்ருய தனாயேயாந்துணையான்.

உ - ம்.

சிறைசெய்யநின்றசெழும்புனலினுள்ளஞ் ... ... ...*
சிறைசெய்புலனுணர்விற்றீர்ந்து—சிறைவிட்... ... ...*
டலைகடலிற்சென்றடங்குமாறுபோன்மீளா ... ... ...*
தலைவிலரன்பாதத்தையுற்று... ... ... (எ)

எவ்வுயிருந்தானேன்னிலெய்துவாரில்லைதா ... ... *
னிவ்வுருவின்வேறேலிறையல்ல—னெவ்வுருவுங் ... ...*
கண்போலவயவங்கள்காணுவக்கண்ணில்லார் ... ...*
கண்பேறேகாணக்கழல்... ... ... ... (அ)

ஐம்பொறியினல்லையெனுமந்தரசிவனை ... ... ...*
யைம்பொறியைவிட்டங்கணைசகல—னைம்பொறியி ... ...*
னீங்கானீர்ப்பாசிபோனீங்கிமலகன்மம்வரி ... ...*
னீங்கானேநீங்குநினைந்து... ... ... ... (கூ)

எட்டாஞ்சூத்திரம்,

முற்றிற்று.

---

## ஒன்பதாஞ்சூத்திரம்

ஊனக்கண்பாசமுணராப்பதியை ... ... ... ...*
ஞானக்கண்ணினிற்சிந்தைநாடி... ... ... ...*
யுராத்துனைத்தேர்த்தெனப்பாசமொருவத் ... ...*
தண்ணிழலாம்பதி விதி ... ... ... ...*
யெண்ணுமஞ்செழுத்தே... ... ... ... ...*

எ - ன் - ஆன்மசுத்திபண்ணுமாறுணர்த்துதனுதலிற்று.

ஈண்டம்முதலை ஞானக்கண்ணாலேகாண்க வென்றது-அவன்வாக்குமனாதீதகோசரமாய் நிற்றலான்.

உ - ம்.

நாடியோவென்போநரம்புசீகோழையோ ... ...*
தேடியெனையறியேன்றோர்ந்தவகை—நாடியரன் ... ...*
றன்னாலேதன்னையுங்கண்டுதமைக்கா ... ... ...*
ரொன்றுமெனவறிவாரின்று ... ... ... (க)

காட்டியகண்ணேதனைக்காணுகண்ணுக்குக் ... ... ...*
காட்டாயவுள்ளத்தைக்கண்காணு—காட்டிய ... ...*
வுள்ளந்தனைக்காணு வுள்ளத்தின்கண்ணாய... ... ...*
கள்வன்றானுள்ளத்திற்காண்... ... ... ... (உ)

இனியசத்தாயுள்ளவன்னபேதங்களை யசத்தென்றுகாணவுளதாய்நிற்பது ஞானசொரூபமென்றுணரற்பாற்று.

உ - ம்.

நிர்க்குணனாய்நின்மலனாய்நித்தியானந்தனாய்த்... ...*
தற்பரமாய்நின்றதனிமுதல்வ - னற்புதம்போ ... ...*
லானவறிவாயளவிறந்துதோன்றானே ... ... ...*
வானேமுதல்களையின்வந்து... ... ... ... (௩)

சுட்டியுணர்வதனைச்சுட்டியசத்தென்னச்... ... ...*
சட்டவினியுளதுசத்தேகாண்—சுட்டி ... ... ...*
யுணர்ந்தீசத்தல்லை யுண்மையைத்தைவம் ... ... ...*
புணர்ந்ததனாற்பொய்விட்டுப்போம் ... ... ... (௪)

கண்டதையன்றன்றென்விட்டுக்கண்டசத்தா... ... ...*
யண்டனையான்மாவினுய்ந்துணரப் - பண்டணைந்த ... ...*
வூனத்தைத்தான்விடுமா றுத்தமனிலொண்கருட ... ...*
சானத்திற்றீர்விடம்போற்றான் ... ... ... ...(௫)

இனியிவ்விடத்துச் சீபஞ்சாக்கரத்தை விதிப்படியுச்சரிக்க*வென்றது. இவ்வான்மாக்களுக்கு ஞானம்பிரகாசித்து மஞ்ஞானத்தை வேம்புதின்ற புழுப்போல நோக்கிற்றை நோக்கி நிற்குமாதலினது நீக்குதற்கெனக்கொள்க.

உ - ம்.

அஞ்செழுத்தாலுள்ளமரனுடைமைகண்டரனை ... ...*
யஞ்செழுத்தாலர்ச்சித்திதையத்தி - லஞ்செழுத்தாற் ... ...*
குண்டலியிற்செய்தோமங்கோதண்டஞ்சானிக்கி ... ...*
லண்டனாஞ்சேடனுமங்கு ... .. ... ... (௬)

---

* விதிப்படியுச்சரிக்கவென்றது மானதமந்தமூனாயெனு மூன்றின்மானதத்தைக்கருதிற்று அஃது மற்றையவிரண்டினுஞ்சிறந்தமையின் சிறந்தவாறென்னையெனின்-(மானதமாகச்செபிக்கிற்கோடிகுணமதிக மூனமின்மந்த முனாயினும்) என்னுமித்திருக்குறளானுணர்க. நித்தியகன்மநெறி செபவிதி ௬ - ம் - திருக்குறள்.

இந்துவிற்பானுவிலிராகுவைக்கண்டாங்குச் ... ... ...*
சிந்தையிற்காணிற்சிவன்கண்ணு - முந்தவே ... ... ...*
காட்டாக்கித்தோன்றிக் கனல்சேரிரும்பென்ன ... ...*
வாட்டானுமோதஞ்செழுத்து ... ... ... (எ)

மண்முதலுளமலர்வித்தைகலாரூப ... ... ...*
மெண்ணியவீசர்சதாசிவரா - நண்ணிற் ... ... ...*
கலையுருவாநாதமாஞ் சத்தியதன்கண்ணு ... ... ...*
நிலையதிலாமச்சிவன்றானோர் ... ... ... ... (அ)

T006400
Mahal Library. Thanjavur

பதாஞ்சூத்திரம்

முற்றிற்று.

---

ாஞ்சூத்திரம்.

அவனேதானேயாகியவந்நெறி ... ... ... ...*
யேகனாகியிறைபணிநிற்க ... ... ... ...*
மலமாயைதன்னொடுவல்வினையின்றே ... ... ...*

எ - ன் - பாசக்ஷயம்பண்ணுமாறுணர்த்துதனுதலிற்று.

ஈண்டுப்ப்ரமேசுரனிவ்வான்மா வாய்நின்ற முறைமை யாலவனிடத்தேகனாய் நிற்கவென்றது - அவ்வாறுநிற்கவே யானெனதென்னுஞ் செருக்கற்றவனது சீபாதத்தையுணையு மாகலான்.

உ - ம்.

நானவனென்றெண்ணினர்க்குநாடுமுளமுண்டாத ... ...*
ஞனெனவொன்றின்றியேதானதுவாய் - நானெனவொன் ...*
றில்லென்றுதானேயெனுமவனோத்தன்னடிவைத் ... ...*
தில்லென்றுதானுமிறை... ... ... ...(க)

இனியம்முதல்பணிவழுவாது நிற்கவென்றது - அவனருளாலல்லதொன்றையுஞ் செய்யானாகவேயஞ்ஞானகன்மம்பிரவேசியாவாகலான்.

உ - ம்.

நாமல்லவிந்திரியநம்வழியினல்லவழி … …*
நாமல்லநாமுமரனுடைமை - யாமென்னி … … …*
னெந்தனுவினின்றுமிறைபணியார்க்கில்லைவினை… …*
முற்செய்வினையுந்தருவான்முன் … … (உ)
சார்ந்தாரைக்காத்தறலைவர்கடனாதல்… … …*
சார்ந்தாரைக்காத்துஞ்சலமிலனாய்ச் - சார்ந்தடியார் … …*
தாந்தானாய்ச்செய்துபிறர்தங்கள்வினைதாங்கொடுத்த… …*
லாய்ந்தார்முன்செய்வினையுமாங்கு … … … (௩)
இங்குளி * வாங்குங்கலம்போல்ஞானிபால்… … *
முன்செய்வினைமாயைமூண்டிடினும் - பின்செய்வினை … *
மாயையுடனில்லாதுமற்றவன்முன்மெய்ப்பொருளே … …*
யாயவதனாலுணருமச்சு … … … … (௪)
நண்ணனல்வேவாதநற்றவர்தம்மினும் … … …*
பண்ணமர்மாசசெலுத்தும்பாகரினு - மெண்ணி … …*
யரனடியோர்பவனாம்புலனிற்சென்று … … …*
மவர்திறனீங்காரதற்கு… … … … (௫)

---

* உளி-ஐந்தாவதன்பொருள் படநின்றதோரிடைச்சொல்-மந்திரவிதியின் மரபுளிவழாவந்தண ரொன்புழிப்போல. இது இயல்புளிக்கோலோச்சும் எனமூன்றுவதன் பொருள்படவும் வரும். இவ்வாறன்றிப்பகுதிப்பொருள் விகுதியாய்த்தனக்கேற்றவுருபேற்றுவருமென்பது நச்சினார்க்கினியார்கருத்து-இவ்வாறுகூறுவதவர்கருத்தென்பதை - தொல்காப்பியம்-சொல்லதிகாரம் இடைச்சொலியல் உ-ம்-சூத்திரவுரையிற்காண்க.

சதசத்தாமெய்கண்டான்சத்தருளிற்காணி ... ...*
லிதமித்தல்பாசத்தினின்றிக் - கதமிக் ... ... ...*
கெரிகதிரின்முன்னிருள்போலேலாவசத்தி ... ...*
னருகணையார்சத்தணைவாரங்கு ... ... ... (௬)

பத்தாஞ்சூத்திரம்

முற்றிற்று.

---

பதினோராஞ்சூத்திரம்.

காணுங்கண்ணுக்குக்காட்டுமுளம்போற் ... ... *
காணவுளத்தைக்கண்டுகாட்டலி ... ... *
னயராவன்பினரன்கழல்செலுமே ... ... *

எ - ன் - பரமேசுரனது பாதத்தை யணையுமாறுணர்த்துதனுதலிற்று.

ஈண்டிவ்வான்மாக்களவனையின்றியமைந் தொன்றையும் விடையியா வாகலானவனுமவற்றது விடயத்தை யுணருமென்றது.

உ - ம்.

ஐந்தையுமொக்கவுணராதவற்றுணர்வ ... ... *
தைந்தும்போனின்றுணருமாதலா-லைந்தினையு ... ... *
மொன்றொன்றுப்பார்த்துணர்வதுள்ளமேயெவ்வுலகு ... *
மொன்றொன்றுப்பார்க்குமுணர்ந்து ... ... (௧)

ஏகமாய்நின்றேயிணையடிகளொன்றுணரப் ... ... *
போகமாய்த்தான்விளைந்தபொற்பினா-னேகமா ... *
யுள்ளத்தின்கண்ணுனுள்குவாருள்கிற்றை ... ... *
யுள்ளத்தாற்காணுனேவுற்று. ... ... (௨)

இனிப்பத்தியினுன் மறவாதேத்தவவனது சிபாதத்தைய ணையுமென்றது - அவனங்கியமின்றிச் செய்பவர் செய்திப்ப யன் விளைத்து நிற்றலான். ... ... ... ... *

உ - ம்.

அருக்கனேர்நிற்பினுமல்லிருளேகாணூர்க் ... ... *
கிருட்கண்ணேபாசத்தார்க்கிச-னருட்கண்ணூற் ... *
பாசத்தைநீக்கும்பகலலர்த்துந்தாமரைபோ ... *
னேசத்தற்றன்னுணர்ந்தார்நேர். ... ... (௩)

மன்னுமிருளைமதிதுரந்தவாறன்பின் ... ... *
மன்னுமரனேமலந்துரந்து-தன்னின் ... ... *
வலித்திரும்பைக்காந்தம்வசஞ்செய்வான் * செய்தல் ... *
சலிப்பில்விகாரியலன்றுன். ... ... (௪)

நசித்தொன்றினுள்ளநசித்தலாலொன்று ... ... *
நசித்திலதேலொன்றுவதில்லை-நசித்துமல... ... *
மப்பணைந்தவுப்பினுளமணைந்துசேடமாங் ... ... *
கப்பின்றுமீசன்கழல். ... ... ... (௫)

பொன்வாண்முன்கொண்மூவிற்புக்கொடுங்கிப்போயகலத் *
தன்வாளேயெங்குமாந்தன்மைபோன்-முன்வாண் ... *
மலத்தின்மறைந்துள்ளமற்றுலகையுண்ணு ... *
மலத்திரித்தச்செல்லும்வரத்து. ... ... (௬)

பதினோராஞ்சூத்திரம்

முற்றிற்று.

---

* செய்வான் என்பதில்-வான் தொழிற்பெயர் விகுதி- இதுவேயன்றி வேபாக்கறிந் தெனப்பாக்குந் தொழிற்பெயர் விகுதியாய்வரும்,

பனிரண்டாஞ்சூத்திரம்.

செம்மலர்நோன்றாள்சேரலொட்டா ... ... *
வம்மலங்கழீஇயன்பரொடுமரீஇ ... ... *
மாலறநேயமலிந்தவர்வேடமு ... ... *
மாலயந்தானுமரனெனத்தொழுமே. ... ... *

எ - ன். அசிந்திதனாய்நின்றபதியைச் சிந்திதனாகக்கண்டு வழிபடுமாறுணர்த்துதனுதலிற்று. ... ... *

ஈண்டாணவமாயை காமியமென்னு மலங்களைக் கழுக வென்றது-அவைதாம்-ஞானத்தினையுணர்த்தா தஞ்ஞானத்தை யுணர்த்துமாகலான்.

புண்ணியபாவம்பொருந்துமிக்காமியமு ... ... *
மண்முதன்மாயைகாண்மாயையுங்-கண்ணிய ... *
வஞ்ஞானங்காட்டுமிவ்வாணவமுமிம்மூன்று ... ந
மெய்ஞ்ஞானிக்காகாவிடு. ... ... ... (க)

இனிச்சிவபத்தர்களோடிணங்குகவென்றது-அல்லாதாரஞ் ஞானத்தை யுணர்த்துவராகலான்.

உ - ம்.

மறப்பித்துத்தம்மைமலங்களில்வீழ்க்குஞ் ... ... *
சிறப்பிலார்தந்திறத்துச்சேர்வை-யறப்பித்துப் ... *
பத்தரினத்தாய்ப்பரனுணர்விஞலுணரு ... ... *
மெய்த்தவரைமேவாவினை. ... ... (உ)

இனிப்பத்தரது திருவேடத்தையுஞ் சிவாலயத்தையும் பரமேசுரனெனக்கண்டு வழிபடுகவென்றது - அவன் மற்றிவ் விடங்களிற் பிரகாசனாய் நின்றேயல்லாத விடத்தப்பிரகாச னாய் நிற்றலான்.

உ - ம்.

தன்னுணரவேண்டித்தன துருவைத்தான்கொடுத்துத்... ...*
தன்னுணரத்தம்முளிருத்தலாற் - றன்னுணரு ... ...*
நேசத்தர்தம்பானிசமுந்ததிநெய்போற்... ... ...*
பாசத்தார்க்கின்றாம்பதி. ... ... (௩)

கண்டதொருமந்திரத்தாற்காட்டத்திலங்கிவே ... *
றண்டல்போனின்றங்குளதாமாற் - கண்டவுருத் ... *
தானதுவாயன்றானன்றானதுவாய்த்தோன்றானே ... *
தானதுவாய்க்காணுந்தவற்கு ... ... (௪)

இனியிவ்விடங்களில்வழிபடுகவென்றது - நரம்புநாடிமுத லானவற்றைத்தானதுவாய் வரும்புருடனவையாகாவாறிப்பு ருடனுமாகலான்.

உ - ம்.

அதுவிதுவென்றததுவல்லான்கண்டார்க் ... ... *
சதுவிதுவென்றதையுமல்லான்—பொதுவதனி ... ...*
லத்துவிதமாதலகண்டமுற்றைவமே... ... ...*
யத்துவிதியன்பிற்றெழு... ... ... ... (௫)

வினையாலசத்துவிளைதலான்ஞானம்... ... ...*
வினைதீரினன்றிவிளையா - வினைதீர ... ... ...*
ஞானத்தைநாடித்தொழவேயதுநிகழு ... ... *
மானத்தாலன்பிற்றெழு. ... ... ... (௬)

தன்னையறிவித்துத்தான்றனைச்செய்தானைப் ... ...*
பின்னைமறத்தல்பிழையலது—முன்னவனே ... ...*
தானேதானச்செய்துந்தைவமென்றுந்தைவமே ... ...*
மானேதொழுகைவலி... ... ... ... (எ)

சிவமென்னுமந்த்ரசிந்தைநேர்நோக்கப் ... ...*
பவமின்றுங்கண்வாசகத்திற்—சிவமுண்டா ... ...*
மொன்றுமிரண்டுமலத்தார்க்கிங்கொண்குருவா... ...*
லின்றிந்நூன்மும்மைமலர்க்கு ... ... (அ)

இத்திருவெண்பா பிற்காலத்தான் ஞேராலியற்றப்பட்டிந் நூல்வந்தவழிகூறுகின்றது.

எந்தைசனற்குமரனேத்தித்தொழவியல்பா ... ... ...*
னந்தியுரைத்தருளுஞானநூல்—சிந்தைசெய்து... ...*
தானுரைத்தான்மெய்கண்டான்றாரணியோர்தாமுணர ... *
வேதுதிருட்டாந்தத்தாலின்று ... ... ... (௯)

பனிரண்டாஞ்சூத்திரமுற்றிற்று.

சிவஞானபோதமூலம்

முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்

———o———